# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 13/2021 நாள்: 16.09.2021

### வேட்புமனு தாக்கல் செய்கையில் கோவிட்-19 பரவாமல் இருக்க தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் கட்டுப்பாடு விதித்துள்ளது

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிபேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல் அறிவிக்கைகளையும், ஏனைய 28 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள பதவியிடங்களுக்கான தற்செயல் தேர்தல் அறிவிக்கைகளையும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டதைத் தொடர்ந்து, மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சி தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய பதவியிடங்களுக்கு 15.09.2021 முதல் வேட்புமனுக்கள் பெறப்பட்டு வருகின்றன.

இத்தேர்தலில் கோவிட்-19 பெருந்தொற்று பரவலைத் தடுக்க தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அதன்படி தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்ய வருவோர் தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்புமனுவினை தாக்கல் செய்ய அவரது அறைக்குள் அனுமதிக்கப்படும் வேட்பாளர் அல்லது வேட்பாளரை முன்மொழிவோர் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர் வேட்பாளர் மட்டும் நேரில் சென்று வேட்புமனுவினை தாக்கல் செய்ய அனுமதிக்கப்படுவார் என்றும், வேட்பாளர் கோவிட்-19 பாதிப்புக்குள்ளாகி இருக்கும் நேர்வில் அவரை முன்மொழிபவர் மட்டும் வேட்பாளரின் சார்பாக நேரில் சென்று வேட்புமனுவை தாக்கல் செய்ய அனுமதிக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

16/9/2021
மக்கள் தொடர்பு அலுவலர்